விதமான முன்னறிவிப்பும் இல்லாமல் அவை புறப்படவேண்டிய நேரத்தில் "நிறுத்தப்பட்டுவிட்டன" என்று அறிவித்தால் பெரிதும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட அறிவிப்புகள் முன் கூட்டியே பொதுமக்களுக்குக் கிடைப்பதற்கான வகையில் விளம்பரம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவசியம் ஏற்படும்போது அந்த மாதிரி அறிவிப்புகள் கொடுக்கப்படுகின்றன.

*High windows in State Transport Buses*

* 543 Q.—DR. H. V. HANDE : will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal by the Government to provide buses on city routes with high windows, so that standing passengers could look out for their stops without crouching?

(b) if so, the date by which the above provision would be made ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) சென்னை மாநகரில் ஓடும் பயணிகள் அதிகமாக நின்று பயணம் செய்ய வசதியுள்ள பேருந்துகளில் பெரிய சாளரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இனி கட்டப்படும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் அனைத்திலும் பெரிய சாளரங்கள் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Is it the programme of the Government to steadily increase the number of buses for standees and reduce the number of buses where more people can sit? What is the position in the standee buses? More than half of the persons are made to stand. May I know from the Hon. Minister what exactly is the programme? How many standee buses are there? How many non-standee buses are there? May I know whether it is not a fact that people are finding it very difficult and inconvenient to stand in the bus and if so, what are the steps taken by the Government to mitigate their sufferings?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேள்வியானது சென்னை மாநகரில் ஓடும் பயணிகள் பேருந்துகளில் பெரிய சாளரங்கள் பொருத்தப்படுமா என்பதைப் பற்றியது. சென்னை மாநகரத்தில் ஓடும் பயணிப் பேருந்துகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலமுறை இம்மன்றத்தில் கேள்விகள் கேட்டு, அவற்றுக்குப் பதிலும் அளிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் இது பற்றி "அலெர்ஜிக்" ஆக இருக்கின்றார்களே தவிர பொது மக்களிடமிருந்து "பஸ்கள் சரியாக இல்லை" என்று எந்தவிதமான புகாரும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : I do not know what exactly the Hon. Minister means by allergy. We get information from the public. We get number of complaints. I would not waste my time in

*1971 ஜூலை 29]*

putting the question, unless I have received a number of complaints. Probably they are now thinking that the Government are immune to their complaints. I may be allregic to the complaints. But they feel that the Government are immune to their complaints. They have complained to me. So, may I know from the Hon. Minister the steps taken by this Government to see at least a few more comforts are given to the standee passengers and whether buses are converted into standees without these glasses and whether such cases have been brought to the attention of the Government ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The complaints are now received from the hon. Member. If he can submit the complaints which he has received from the passengers, the merits and demerits will be looked into by the Government.

திருமதி த. ந. அனந்தநாயகி : பேரவைத் தலைவரவர்களே, இப்படிச் சென்னை நகரில் ஓடக்கூடிய பஸ்களிலேயெல்லாம் பயணிகளை குறிக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்குமேலே "ஓவர் லோட்" ஆக ஏற்றுகின்றார்களே, இது போன்றே தனியார் நடத்தும் பஸ்களிலே ஏற்றுவது அனுமதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அப்படி ஒன்றும் சென்னை நகரில் ஓடும் பஸ்களில் "ஓவர் லோட்" செய்வதாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால், பயணிகள் நின்று கொண்டு செல்லும் பேருந்துகளை அதிகமாகப் பயன்படுத்தும் காரணத்தினால் சாதாரணமாக பஸ்களில் குறித்த அளவிற்குத்தான் ஏற்றப்படுகின்றார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, அரசு எக்ஸ்பிரஸ் பஸ்களிலே போய்ச்சேரும் ஊரின் பெயரும் போய்ச் சேரும் நேரமும், செல்லும் வழிகள் பற்றியும் எழுதப்பட்டிருந்த அறிவிப்பு பலகைகள் இருந்தன. ஒவ்வொரு ஸ்டேஜ் செல்லும் போதும், அவற்றை மாற்றிக்கொண்டே இருப்பார்கள். இதனால் பயணம் செய்கின்றவர்களுக்கு, வர இருக்கின்ற ஊரும், சேரும் நேரமும் தெரிந்தது. இப்போது பெரும்பாலும் அவை போடப் படுவதில்லை. இவை இருப்பது பயணிகளுக்குப் பேருதவியாக இருப்பதால் இவற்றை மீண்டும் போடுவதற்கு உத்திரவிடப்படுமா. என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, இத்தகைய அறிவிப்புப் பலகைகளும், குடிதண்ணீர் வசதியும், கெடிகாரமும் ஒவ்வொரு எக்ஸ்பிரஸ் பஸ்ஸிலும் வைத்திட வேண்டும் என்று அரசு உத்திரவிட்டுள்ளது. அவ்வுத்திரவு இப்போதும் நடைமுறையில் இருக்கின்றது. நானும் அடிக்கடி திடீரென்று பேருந்துகளைச் சோதனை செய்து பார்க்கும்போது இவைகளெல்லாம் கவனிக்கப்படுகின்றனவா என்று பார்க்கிறேன். இப்போதுகூட நாகையிலிருந்து வரும் பஸ்ஸைப் பார்க்கும்போது எல்லாம் முறையாகவே இருந்தன என்று தெரிவித்துக்கொள்ளு கிறேன்.